**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .749/2019 | Village: | |
| Sessions | : | Age | :60 |
| Deposition of Witness for | : LW-6/PW- 2 | Taluk | : |
| Name | : கனகராஜ் | | |
| Father's/Husband's Name | : பொன்னுசாமி | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13.03.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பனந்தாளில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ராமராஜன் எனது மகன் ஆவார். அசா1 எனது மனைவி ஆவார். கடந்த 2017 ம் ஆண்டு ஒரு நாள் 12 ம் தேதி மாதம் ஞாபகமில்லை. மாலை சுமார் 7.30 மணியளவில் நான் திருப்பனந்தாள் மேலவெளியில் உள்ள எங்கள் வயலில் இருந்தபோது அருகில் இருந்தவர்கள் கும்பகோணம் ரோட்டில் வெல்டிங் பட்டறை அருகில் எனது மகன் மற்றும் மனைவி ஆட்டோ மோதி விபத்தில் அடிப்பட்டதாக தகவல்

சொன்னார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். அதற்குள் அடிப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். பின்னர் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த எனது மகன் மற்றும் மனைவியை பார்த்தேன். பின்னர் என் மகனை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சையில் இருந்த எனது மகன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையில்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.749/2019 | Village: | |
| Sessions | : | Age | :40 |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Taluk | : |
| Name | : செல்வி | | |
| Father's/Husband's Name | : கனகராஜ் | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13.03.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பனந்தாளில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ராமராஜன் எனது மகன் ஆவார். கடந்த 7 வருடங்களுக்கு முன்னால் ஒரு நாள் 12ம் தேதி மாதம் ஞாபகமில்லை. மாலை சுமார் 7 மணியளவில் திருப்பனந்தாள் கடைத்தெருவில் பொருட்கள் வாங்கிவிட்டு நானும் எனது மகனும் வீட்டிற்கு செல்வதற்காக கும்பகோணம் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையின் கீழே மண் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தோம். நான் முன்னால்

சென்று கொண்டிருந்தேன். எனக்கு பின்னால் எனது மகன் வந்து கொண்டிருந்தார். அப்போது எனது மகன் அம்மா என கத்தினார். நான் திரும்பி பார்த்தபோது எங்களுக்கு பின்னால் வந்த ஒரு ஆட்டோ என்மீதும் மோதிவிட்டது. அதனால் எனது மண்டை உடைந்துவிட்டது. எனது இடது கால் எலும்பு உடைந்துவிட்டது. எனது முதுகிலும் காயம் ஏற்பட்டது. அடிப்பட்டு கிடந்த எனது பையனை நான் உடைந்த எனது மண்டையை பிடித்துக்கொண்டு தேடி கண்டுபிடித்து பார்த்தேன். எனது மகனின் உடல் முழுவதும் ரத்தமாக இருந்ததால் எங்கே காயம் என்று தெரியவில்லை. மேற்படி ஆட்டோ எனது மகன் மீது மோதிவிட்டு பின்னர்தான் என்மீது மோதியுள்ளது. அதனால்தான் என் மகனுக்கும் அடிப்பட்டது. பின்னர் அடிப்பட்ட எங்களை முதலில் சோழபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் என் மகனை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு 3 நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது மகன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் மருததுவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான்.(**மேற்படி புகார் வாக்குமூலம் பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி விபத்து ஏற்படுத்திய ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அந்த ஆட்டோவின் ஓட்டுநர் எங்கள் மீது மோதிவிட்டு அந்த இடத்தில் இருந்து ஆட்டோவை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதால் நான் அவரை பார்க்கவில்லை. அதன் பிறகு அந்த ஆட்டோ சோழபுரத்தை சேர்ந்த ஆட்டோ என்பதையும் அதனை சரண் என்பவர் ஓட்டி வந்தார் என்பதையும் ஊர்க்காரர்கள் சொல்லி

பின்னால் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் அன்றைய நாள் முழுவதும் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் மாலை 6 மணி முதல் 7 மணி வரை மழை பெய்தது. சம்பவம் நடந்தபோது தூறலாக இருந்தது. சம்பவ இடத்தில் நானும் எனது மகன் மட்டும்தான் சென்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். சம்பவத்தின்போது சம்பவ இடம் இருட்டாக இருந்ததா என்றால் எனது மகன் அடிப்பட்ட இடம் வெளிச்சமாக இருந்தது. நான் அடிப்பட்ட இடம் இருட்டாக இருந்தது. போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்ற பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்ன நாள் நேரத்தில் இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் புகார் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், எனது மகன் இழப்பிற்கு மோட்டார் வாகன இழப்பீடு பெறுவதற்காக எதிரி மற்றும் வாகனத்தின் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் என்னை கடைசியாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வைத்து சம்பவத்தன்று விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் ஆட்டோவின் ஓட்டுநரை கேள்விபட்டு தெரிந்து கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 749/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-12/PW- 3 | Village: |
| Name : லெட்சுமணன் | Age :51 |
| Father's/Husband's Name : மாயன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13.03.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருப்பனந்தாளில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன், கடந்த 12.08.2017 ம் தேதி இரவு 9 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது போலிசார் என்னை வீட்டில் இருந்து அழைத்து வந்து திருப்பனந்தாள் கும்பகோணம் மெயின்ரோட்டில் நடந்த விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து அதற்காக என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள்.

தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் சுமாராக எத்தனை கையொப்பங்கள் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் வரைபடத்தை காட்டினார்களா என்றால் காட்டினார்கள். நான் போவதற்கு முன்பே போலிசார் வரைபடம் வரைந்து தயார் செய்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை. நான் போனபிறகுதான் வரைந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வீடுகள் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை தவிர வேறு யார் யாரிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எப்போதும் இரவு நேரத்தில் இருட்டாக இருக்கும் என்றால் சரியல்ல. வெளிச்சமாக இருக்கும். நான் சொன்ன நாள் நேரத்தில் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**